

# நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## பெருநகர சென்னை மாநகராட்சி




# தூய்மைப் பணியாளர்களுக்கான நலத்திட்டங்கள் தகவல் கையேடு

# தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் சார்பில் வழங்கப்படும் நலத்திட்டங்கள்

தற்காலிக தூய்மைப் பணியாளர்கள் (NMR), சுயஉதவிக் குழு தூய்மைப் பணியாளர்கள் (NULM Conservancy Workers), வெளிநிறுவனத்தில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்கள் (Outsourcing Conservancy Workers) மற்றும் எந்த ஒரு நிறுவனத்திலும் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்கள் ஆகியோருக்கு தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் சார்பில் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள்.

(நிரந்தர தூய்மைப்பணித் தொழிலாளர்களுக்குப் பொருந்தாது.)

| வ. எண் | நலத்திட்டத்தின் பெயர் | வழங்கப்படும் உதவித்தொகை |
|---|---|---|
| 1. | **விபத்துக் காப்பீட்டுத் திட்டம்**<br>பணியிடத்தில் விபத்து/மரணம்/ உறுப்புகளை இழந்தால்/சரி செய்ய இயலாத அளவு இழத்தல் | ரூ. 5,00,000/- |
| | ஒரு கையினை இழந்தால் | ரூ.1,00,000/- |
| | ஒரு காலினை இழந்தால் | ரூ.1,00,000/- |
| | ஒரு கண் முழுவதும் சரிசெய்ய முடியாத அளவு பார்வை இழப்பு | ரூ.1,00,000/- |
| | ஏனைய காயங்கள் ஏற்பட்டு முழு இயலாமைக்கு | ரூ.1,00,000/- |
| 2. | **இயற்கை மரண உதவித்தொகை** | ரூ.20,000/- |
| 3. | **ஈமச்சடங்கு உதவித்தொகை** | ரூ.5,000/- |
| 4. | **முதியோர் ஓய்வூதியம்** | ரூ.1,000/- |
| 5. | **திருமண உதவித்தொகை**<br>தொழிலாளர் (அ) மகன் (அ) மகள் (குடும்பத்திற்கு இருமுறை மட்டும்)<br>ஆண் | ரூ.3,000/- |
| | பெண் | ரூ.5,000/- |

| வ. எண் | நலத்திட்டத்தின் பெயர் | வழங்கப்படும் உதவித்தொகை |
|---|---|---|
| 6. | **கல்வி உதவித்தொகை** | |
| | (i) 10ஆம் வகுப்பு படித்து வரும் பெண்கள் | ரூ.1,000/- |
| | (ii) 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர் (இருபாலருக்கும்) | ரூ.1,000/- |
| | (iii) 11ஆம் வகுப்பு படித்து வரும் பெண்கள் | ரூ.1,000/- |
| | (iv) 12ஆம் வகுப்பு படித்து வரும் பெண்கள் | ரூ.1,500/- |
| | (v) 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர் (இருபாலருக்கும்) | ரூ.1,500/- |
| | (vi) முறையான பட்டப்படிப்பு | ரூ.1,500/- |
| | (vii) முறையான பட்டப்படிப்பு (விடுதியில் தங்கிப் படித்தால்) | ரூ.1,750/- |
| | (viii) முறையான பட்ட மேற்படிப்பு | ரூ.4,000/- |
| | (ix) முறையான பட்ட மேற்படிப்பு (விடுதியில் தங்கிப் படித்தால்) | ரூ.5,000/- |
| | (x) தொழில்நுட்ப பட்டப்படிப்பு | ரூ.4,000/- |
| | (xi) தொழில்நுட்ப பட்டப்படிப்பு (விடுதியில் தங்கிப் படித்தால்) | ரூ.6,000/- |
| | (xii) தொழில்நுட்ப பட்ட மேற்படிப்பு | ரூ.6,000/- |
| | (xiii) தொழில்நுட்ப பட்ட மேற்படிப்பு (விடுதியில் தங்கிப் படித்தால்) | ரூ.8,000/- |
| | (xiv) ஐ.டி.ஐ. / பாலிடெக்னிக் | ரூ.1,000/- |
| | (xv) ஐ.டி.ஐ. / பாலிடெக்னிக் (விடுதியில் தங்கிப் படித்தால்) | ரூ.1,200/- |
| 7. | **மகப்பேறு உதவி** | ரூ.6,000/- |
| | கருச்சிதைவு / கருக்கலைப்பு | ரூ.3,000/- |
| 8. | **கண்கண்ணாடி உதவி** | ரூ.500 வரை/- |

தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் கீழ் பதிவு செய்துள்ள உறுப்பினர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்கள் இத்திட்டத்தில் பயன்பெறத் தகுதியுடையவர்கள்.

## தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தில் உறுப்பினராக இணைவதற்கு வேண்டிய ஆவணங்கள்

தூய்மைப் பணியாளர்களின் புகைப்படம், பணிபுரியும் நிறுவனத்தின் அடையாள அட்டை, குடும்ப அட்டையின் எண், வங்கி அடையாள அட்டை, ஆதார் அட்டை நகல்கள், குழந்தைகள் கல்வி பயிலும் பள்ளியின் EMIS No. ஆகியவற்றை வழங்க வேண்டும். மண்டல அலுவலர் வாயிலாக பரிந்துரை விண்ணப்பப் படிவங்கள் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு, உறுப்பினர் அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

## தாட்கோ நிறுவனத்தின் மூலம் தூய்மைப் பணியாளர்களுக்கு தொழில் தொடங்குவதற்கு வழங்கப்படும் கடனுதவிகள்

தற்காலிக தூய்மைப் பணியாளர்கள், சுயஉதவிக் குழு தூய்மைப் பணியாளர்கள், வெளிநிறுவனத்தில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அவர்களின் வாரிசுதாரர்கள் தொழில் தொடங்குவதற்காக தாட்கோ நிறுவனத்தின் மூலம் ரூ.50,000/- வரை கடனுதவிகள் வழங்கப்படுகிறது.

## இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

ஆதார் அட்டை, பான் அட்டை, குடும்ப அட்டை

முறையான மற்றும் முறைசாரா கழிவுநீர் சார்ந்த பணிகளில் நேரடியாக ஈடுபடும் தூய்மைப் பணியாளர்களுக்கு (Core Sanitation Workers) சமூக கழிப்பிடங்கள் (CT) மற்றும் பொது

கழிப்பிடங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள் (PT), மழைநீர் வடிகால் சுத்தம் செய்பவர்கள், கழிவுநீர்த் தொட்டியை சுத்தம் செய்பவர்கள், இயக்குதல் மற்றும் பராமரித்தல் மூலம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் (Faecal Sludge Treatment Plant (FSTP)) / Sewage Treatment Plant (STP) பணிபுரிபவர்களுக்கு **தாட்கோ மூலம் வழங்கப்படும் சலுகைகள்**:

தொழில் திறன் பயிற்சி, தூய்மைப் பணியாளர்கள் மேம்பாட்டுத் திட்ட (SWDS) அடையாள அட்டை & திறன் சரிபார்ப்பு, தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள், குறைந்தபட்ச ஊதியம் உறுதி செய்தல், உடல்நலம் மற்றும் ஆயுள் காப்பீடு, மருத்துவ முகாம், சமூகப் பாதுகாப்புடன் தொடர்பு & வாழ்வாதார ஆதரவுத் திட்டங்கள் (உடல் ஊனம், விபத்துக் காப்பீடு, முதியோர் ஓய்வூதியம், கல்வி உதவித்தொகை, சுகாதாரம்/மருத்துவப் பரிசோதனை, திருமண உதவித்தொகை உள்ளிட்ட உதவித் தொகைகள்)

**தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தில் உறுப்பினராக சேருதல் மற்றும் நலத்திட்ட உதவிகள் தொடர்பான விவரங்களுக்கு**

தாட்கோ முதன்மைச் செயல் அலுவலரின் 94450 29542 என்ற கைபேசி எண்ணிலும், 044-2855 0655 என்ற அலுவலக எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

**முகவரி :**

**தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியம்**

முதல் தளம்,
மாவட்ட நூலக ஆணைய அலுவலகக் கட்டடம், LLA,
தேவநேயப் பாவாணர் நூலகம், அண்ணா சாலை,
சென்னை - 600 002.

---

மேலும், **பெரு நகர சென்னை மாநகராட்சியில் உள்ள கட்டுப்பாட்டு மையம் எண் 1913**ல் தொடர்பு கொண்டு தூய்மைப் பணியாளர் நலவாரியத்தில் உறுப்பினராகப் பதிவு செய்தல் மற்றும் நலத்திட்ட உதவிகள் தொடர்பான தகவல்களை கேட்டுத் தெரிந்து கொண்டு பயன்பெறலாம்.

---

## பெருநகர சென்னை மாநகராட்சி

பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியாற்றும் தற்காலிக தினக்கூலிப் பணியாளர்களின் (NMR) மாத ஊதியத்தில் ரூ.110/- பிடித்தம் செய்யப்படுகிறது. பணிபுரியும் காலங்களில் மரணம் நிகழ்ந்தால் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூ.5 இலட்சம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

### பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்கள் (நிரந்தர தூய்மைப் பணியாளர்களுக்குப் பொருந்தாது) தூய்மைப் பணியாளர் நல வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு செய்தல்

பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்காலிக தூய்மைப் பணியாளர்கள், சுயஉதவிக் குழு தூய்மைப் பணியாளர்கள், வெளிநிறுவனத்தில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்கள் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நலவாரியத்தில் உறுப்பினராக இணைவதற்கு பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள மண்டல அலுவலர்கள் வாயிலாக Tamilnadu Cleanliness Member Portal எனும் இணையதளத்தின் வாயிலாக விவரங்கள் பதியப்பட்டு, உறுப்பினர்கள் அடையாள அட்டை தாட்கோ நிறுவனத்தால் பெற்று வழங்கப்படுகிறது.

## பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மைப் பணியாளர்களுக்கான மருத்துவப்பரிசோதனை மற்றும் சிகிச்சைகள்

மாண்புமிகு மேயர் அவர்களின் 2024-25ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியை தூய்மையாகப் பராமரிக்கும் மிக முக்கியப் பணிகளை மேற்கொள்ளும் தூய்மை, சுகாதாரம் மற்றும் சாலைப் பணியாளர்களின் உடல்நலனை பேணிக் காக்கும் வகையில் அனைத்து நான்காம் நிலை களப் பணியாளர்களுக்கும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மூலம் முழு உடல் பரிசோதனை பெருநகர சென்னை மாநகராட்சியின் செலவில் மேற்கொள்ளப்படுகிறது. இதன் மூலம் அடிப்படை தொழிலாளர்களின் நலன் காக்கப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் வாயிலாக நிரந்தர/தற்காலிக தூய்மைப் பணியாளர்கள், சுயஉதவிக் குழு தூய்மைப் பணியாளர்களுக்கு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு மருத்துவப் பரிசோதனை மற்றும் சிகிச்சைகள் வழங்கப்படுகிறது.

வெளிநிறுவனத்தில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு (Outsourcing) அந்நிறுவனத்தின் வாயிலாக மருத்துவப் பரிசோதனை மற்றும் சிகிச்சைகள் வழங்குவதற்காக குறிப்பிட்ட கால இடைவெளியில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகிறது.

## பெருநகர சென்னை மாநகராட்சியில் நிரந்தர தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள்

ஒரு பணியாளருக்கு வருடத்திற்கு 2 செட் சீருடைகள், 2 துண்டுகள், 1 செட் காலணிகள், 2 வருடத்திற்கு ஒரு

ரெயின்கோட், வருடத்திற்கு 12 துணி சோப்புகள் மற்றும் 12 குளியல் சோப்புகள் வழங்கப்படுகிறது. மேலும், முதன்மை உடற்பரிசோதனை இலவசமாக மேற்கொள்ளப்படுகிறது. தற்காலிகப் பணியாளர்களுக்கு இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை ரெயின் கோட் மற்றும் ஒளிரும் மேலாடை வழங்கப்படுகிறது.

---

## தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நலவாரியம்

### அரசாணை நிலை எண். 61, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.6) துறை, நாள் 03.05.2023

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும், திருமதி. செ. கனிமொழி பத்மநாபன் கோவை மாவட்டம் அவர்களை உப தலைவராகவும், 14 புதிய அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் 12 அலுவல் சாரா உறுப்பினர்களைக் கொண்டும் இவ்வாரியம் திருத்தியமைத்து ஆணையிட்டுள்ளது.

**அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் :**

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / முதன்மைச் செயலாளர் / செயலாளர்

1. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
2. நிதித் துறை
3. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
5. தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை
6. பள்ளிக் கல்வித் துறை
7. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை

8. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை
9. இயக்குநர் / ஆணையர், ஆதி திராவிடர் நலத் துறை
10. இயக்குநர், பழங்குடியினர் நலத் துறை
11. மேலாண்மை இயக்குநர், தாட்கோ, உறுப்பினர் செயலர்
12. இயக்குநர் / ஆணையர், பேரூராட்சிகள்
13. இயக்குநர் / ஆணையர், நகராட்சி நிருவாகம், சென்னை
14. இயக்குநர் / ஆணையர்,
    ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

## அலுவல் சாரா உறுப்பினர்கள்

1. திரு. பூ. மூக்கையா, திருநெல்வேலி மாவட்டம்
2. திரு. செ. ரமேஷ், நாமக்கல் மாவட்டம்
3. திரு. ரெ. விஜயசங்கர், தூத்துக்குடி மாவட்டம்
4. திரு. க. குருநாதன், தஞ்சாவூர் மாவட்டம்
5. திரு. தே. கண்ணன், விழுப்புரம் மாவட்டம்
6. திரு. பெ. தங்கவேல், மதுரை மாவட்டம்
7. திரு. கு. மகாலிங்கம், மதுரை மாவட்டம்
8. திரு. நா. சேகர், திருச்சி மாவட்டம்
9. திரு. ஆர்.பி. மோகன், ஈரோடு மாவட்டம்
10. திரு. சி. சீனிவாசன், பாடி, சென்னை மாவட்டம்
11. திரு. ஜி.கே. ராஜன் (எ) கோவிந்தராஜன், புளியந்தோப்பு,
    சென்னை மாவட்டம்
12. திரு. தி. அரிஷ்குமார், திருவள்ளூர் மாவட்டம்

இவ்வாரியத்தில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள துணைத் தலைவர் மற்றும் அலுவல்சாரா உறுப்பினர்களின் பதவிக்காலம் இதற்கான அரசாணை வெளியிடப்பட்ட நாள் 03.05.2023 முதல் 3 ஆண்டுகளாகும். (02.05.2026 அன்றுடன் முடிவடைகிறது). இவ்வாரியத்தின் உறுப்பினர் செயலராக மேலாண்மை உறுப்பினர் தாட்கோ அவர்களே தொடர்ந்து செயல்படுவார்.

வெளியீடு :
**பெருநகர சென்னை மாநகராட்சி**